மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

இ.ம.எண்.6/2021

அ.வ.எண்.39/2019

மசா2

தேதி :- 15.12.2021

பெயர் :- ஏனோஸ்பென்ஜமின் வழக்கறிஞர் ஆணையர்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தேதி 15 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மனு சொத்தினை இரு தரப்பு வழக்கறிஞருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து இரு தரப்பு வழக்கறிஞர் முன்னிலையிலும் சர்வேயர் முன்னிலையும் அளந்து நீதிமன்றத்தில் ஆணையர் அறிக்கை மற்றும் 'வரைபடம் சர்வேயர் வரைபடம் இருதரப்பிற்கும் நகல் கொடுத்துவிட்டு தாக்கல் செய்தேன் ஆணையர் அறிக்கை **நிமாசாஆ1** ஆணையர் வரைபடம் வருவாய் துறை ஆவணத்தின் அடிப்படையில் **நிமாசாஆ2** ஆணையர் வரைபடம் வாதியின் ஆவணத்தின் அடிப்படையில் **நிமாசாஆ3** சர்வேயர் வரைபடம் **நிமாசாஆ4** இவ்வாறாக எனக்கு வழங்கப்பட்ட பணியினை முடித்து கட்டளையை நிறைவேற்றினேன். இந்த வழக்கில் மனு சொத்தினை மட்டும் அளந்தேன். என் கட்டளை படி மனு சொத்தை அளக்க மற்றும் சொத்தில் உள்ள Physical Feature சேர்த்து குறிப்பிட்டுள்ளது ஆனால் நான் அறிக்கையில் சொத்துகள் என்னன்ன உள்ளது என்று குறிபிட்டு சொல்லவில்லை என்றால் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் வேறு விவரங்கள் இல்லை. மனு தபசில் சொத்தில் நான்கு புறத்திலிருந்தும் அளவீடு செய்து குறியீடு செய்ய குறிப்பிடப்பட்டுள்ளது. மனு தபசில் சொத்தினை நான் படித்து பார்த்துள்ளேன். ஆணையர் அறிக்கையில் எந்த திசையிலிருந்து அளந்தாக உள்ளது என்றால் கிழக்கு பக்கத்திலிருந்து மேற்கு நோக்கியும் தெற்கு பக்கத்திலிருந்து வடக்கு பக்கம் நோக்கி அளந்ததாக உள்ளது வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் அளந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மனு தபசில் சொத்தை அடையாளம் காட்ட எந்த உறுதியான ஆவணத்திலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்

என்றால் A என்ற புள்ளியில் பழைய வீட்டு சுவர் இருந்தது N புள்ளி காம்பவுண்ட்டுக்கு தெற்கிலிருந்தும் அளந்தாக குறிப்பிட்டுள்ளேன். என் அறிக்கையில் A மற்றும் N நிர்ணயிக்க எதன் அடிப்படையில் அளவு செய்தேன் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, இது தொடர்பாக என்னிடம் எந்த விளக்கமும் கேட்கபடவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எந்த தேதியில் எந்த Remarks கேட்டார்களா என்றால் இல்லை. N புள்ளி நிர்ணயிக்கும் விவரம் சர்வே எண்.1926/15 மற்றும் 1926/16 இரு எண்ணிற்கும் பொதுவாக உள்ள கிழமேல் காம்பவுண்ட் சுவற்றின் தென் பக்கததிலிருந்து N புள்ளி நிர்ணயித்தேன். காம்பவுண்ட் சுவர் எதன் அடிப்படையில் சரியாக இருந்தது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அளவு விவரங்கள் குறிப்பிட்டுள்ளேன். மனு தபசில் சொத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 106 அடி. தென்வடல் 10 அடி என்று உள்ளது. வாதியின் ஆவணத்தின் அடிப்படையில ்தாக்கல் செய்த ஆணையர் வரைபடத்தில் மனு 2வது தபசில் சொத்தை எந்த இடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வருவாய்துரை ஆவணத்தின் படி தாக்கல் செய்த ஆணையர் வரைபடத்தில் வடக்கு திரையிலிருந்து என்னன்ன ஆவணங்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வாதியின் ஆவணத்தின் படி வரைபடத்தில் வடக்கு பக்கத்தில் என்ன அளவு குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிபிடவில்லை.

குறுக்கு விசாரணை:

கட்டளையில் உள்ள சர்வே எண்ணிலும் அதன் பக்கத்து இடத்திலும் சர்வே கல் இல்லாததால் சுவரை அடையாளமாக வைத்து வழக்கு சொத்தை நிர்ணயித்தேன் என்றால் சரிதான். வருவாய்துரை அளவிளான வரைபடத்தில் AIP புள்ளிகளுக்கு இடையில் இரண்டு பக்கமும் உள்ள சுவர் சரியான அளவில் வந்தது. அதனால் தான் A புள்ளிலிருந்து கிழக்கு நோக்கி அளந்தேன் என்றால் சரிதான். உட்பிரிவு எண்.1925/16 கிழக்கு எல்கையில் ்தென்வடல் அளவு 2.4 என்றால் சரிதான். அது வருவாய் துறை ஆவணத்தின் படியிலான அளவு. உட்பிரிவு 16ஐ புல எண்.1925 கிழக்கு கடைசி வரை நிர்யணம் செய்து பார்த்தேன். அவ்வாறு நிர்ணயம்செய்தததில் அந்த இடம் பூமியில் உள்ளது ஆனால் அது

ஆக்கிரமிப்பு செய்யபடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பு ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தை நிர்ணயிக்க வேண்டி மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புல எண்.1925ன் கிழக்கு கடைசியல் பாதையை வடக்கே இருந்து நிர்ணயம் செய்வதற்கு வருவாய் துறை ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். வாதியின் ஆவணத்தின்படியும் எனக்கு பாதையை நிர்ணயம் செய்ய அளவு எதுவும ்கிடையாது என்றால் சரிதான். புல எண்களின் 4 பக்கத்திலும் நத்ததமாக உள்ளதால் சர்வே கல் கிடையாது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.